## இந்திய உயர் ஸ்தானிகராலயம்

## கொழும்பு

***************

**ஊடக அறிக்கை**

**சுவாமி விவேகானந்தா கலாசார நிலைய**

**பணிப்பாளரின் மூன்று நாள் தம்ம யாத்திரை**

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசார பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் டாக்டர் ரேவந் விக்ரம் சிங் அவர்கள் இந்தியா - இலங்கை இடையிலான பகிரப்பட்ட பாரம்பரியம் மற்றும் இரு நாட்டு மக்களிடையிலான தொடர்புகள் ஆகியவற்றின் ஆழத்தினை சுட்டிக்காட்டும் வகையில் மூன்று நாள் தம்ம யாத்திரை ஒன்றை 2021 ஏப்ரல் 24 முதல் 26 வரை குருநாகலிலுள்ள கதுருவேவா மற்றும் பிங்கிரிய ஆகிய கிராமங்களுக்கு மேற்கொண்டிருந்தார் . பக் பௌர்ணமி தினத்தை அனுஸ்டிக்கும் முகமாக இந்த யாத்திரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த யாத்திரையின் ஓர் அங்கமாக , கொவிட்19 க்கு எதிரான இந்தியாவின் போராட்டம் மற்றும் இந்தியாவுடனான கூட்டொருமைப்பாட்டுக்காக ஸ்ரீ சுதர்ஷனராமய விகாரையில் அதி வணக்கத்துக்குரிய மகாசங்கத்தினர் மற்றும் பிங்கிரிய , கதுருவேவா கிராமங்களின் மக்கள் 2021 ஏப்ரல் 24 ஆம் திகதி விசேட பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த வழிபாடுகளுக்காக டாக்டர் சிங் அக்கிராமங்களின் மக்களுக்கும் மஹாசங்கத்தினருக்கும் தனது நன்றிகளை தெரிவித்திருந்தார் . அன்றைய தினம் பிங்கிரியவில் உள்ள தேவகிரி ரஜ மஹா விகாரையில் மகாசங்கத்தினரிடம் ஆசிபெற்றிருந்த டாக்டர் சிங் வழிபாடுகளிலும் பங்கேற்றார்,

இந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாக குரு ஒருவரின் அழைப்பின் பேரில் 2021 ஏப்ரல் 25 ஆம் திகதி கதிகாமுவே மற்றும் பனவாவே ஆகிய அயல் கிராமங்களுக்கும்

டாக்டர் சிங் அவர்கள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இக்கிராமங்களில் உள்ள மகா சங்கத்தினரிடம் ஆசி பெற்றதுடன் அப்பகுதியில் உள்ள பிரிவேனாக்கள் மற்றும் உள்ளூர் விகாரைகளிலும் அவர் வழிபாட்டினை மேற்கொண்டிருந்தார். 2021 ஏப்ரல் 26 ஆம் திகதி பக் பௌர்ணமி தினத்தன்று சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் அவர்கள் கதுரவேவா ஸ்ரீ சுதர்சனராமய விகாரையில் புனித புத்த தாதுக்களின் தாது வந்தனம் வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த இந்த தம்ம யாத்திரையை மகா சங்கத்தினரும் அதில் பங்கேற்றிருந்த கிராம மக்களும் பாராட்டியிருந்ததுடன் இந்திய இலங்கை மக்களிடையிலும் மதகுருமார்கள் இடையிலும் இதேபோன்ற நெருக்கமான தொடர்புகள் எதிர்காலத்திலும் பேணப்படவேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர்.

புதுடில்லியில் 2020 ஆண்டுக்கான தர்ம சக்கர தினத்தன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரை நிகழ்த்தும் போது , அசாதாரண சவால்களை எதிர்த்து பௌத்த சிந்தனைகள் மூலம் உலகம் நடவடிக்கைகளை முன்னெடுப்பதே அவற்றிற்கு தீர்வினை வழங்கும் என குறிப்பிட்டிருந்தமை இந்த சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த சிந்தனைகள் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களுக்கும் தொடர்புடையவை ஆகும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியிருந்தார்.

*****

கொழும்பு

26 ஏப்ரல் 2021